## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## திருச்சிராப்பள்ளி மாவட்டவானிலைசாா்ந்தவேளாண் அறிக்கை

(04.05.2024 முதல் 08.05.2024)

**அறிக்கைஎண்: 10/2024** **தேதி : 03.05.2024**

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 40 - 43 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 30 °செ ஆகவும் பதிவானது.

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (04.05.2024 முதல் 08.05.2024).

| கடந்த வார வானிலை (30.04.2024 முதல் 02.05.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (04.05.2024 முதல் 08.05.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 30/04 | நாள்-2 01/05 | நாள்-3 02/05 | தேதி | நாள்-1 04/05 | நாள்-2 05/05 | நாள்-3 06/05 | நாள்-4 07/05 | நாள்-5 08/05 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 1 | 1 | 1 | 0 | 7 |
| 40 | 41 | 43 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 43 | 43 | 42 | 43 | 42 |
| 28 | 29 | 30 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 28 | 28 | 27 |
| 6 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 7 | 3 | 8 |
| 73-41 | 67-36 | 66-48 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-20 | 60-20 | 70-20 | 70-20 | 70-20 |
| 8 | 13 | 17 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 8 | 10 | 8 | 10 |
| தென் தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தென் தென் மேற்கு | தென் தென் கிழக்கு |

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 04.05.2024, 05.05.2024, 06.05.2024 மற்றும் 08.05.2024 ஆகிய தினங்களில் லேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 42 - 43 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 8 – 10 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும். |

| | | |
|---|---|---|
| பயறுவகை பயிர்கள் | விதைப்பு | கோடை இறவை பயிராக சித்திரைப்பட்டத்தில் ( ஏப்ரல் - மே) பயறுவகை பயிர்களை விதைக்க உகந்த இரகங்களான ஆடுதுறை 5, வம்பன் 5, வம்பன் 6 மற்றும் வம்பன் 8 போன்ற உளுந்து இரகங்களையும் வம்பன் 2 மற்றும் வம்பன் 3 போன்ற பாசிப்பயறு இரகங்களையும் பயிரிடவும். |
| தென்னை | | தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் நீரை மண்ணில் சேமிக்க முடியும் |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும். |

**குறுஞ்செய்தி**

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும்.

.

**இயக்குநர்**